# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.7 (L.W.8)

| | |
|---|---|
| Name | திருநாவுக்கரசு |
| Father/Husband Name | N.K. கணேசன் |
| Calling/Occupation | கூடுதல் இயக்குநர், தடய அறிவியல் துறை, சென்னை. (ஓய்வு) |
| Age | 63 |
| Address | எண்.13, வெங்கடாசல செட்டி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

( Accused Present)

சாட்சி நேரில் ஆஜரில்லை. சாட்சியை இணையதளம் மூலம் விசாரிக்க அனுமதி கோரி அதன் அடிப்படையில் சென்னை தடய அறிவியல் துறை அலுவலகத்திலிருந்து Video conference மூலம் அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் கூடுதல் இயக்குநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நீதிமன்றத்திலிருந்து வேப்பங்குப்பம் காவல் நிலைய குற்ற எண் 410/2017 வழக்கில்

சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததின் பெயரில் நான் இன்று காணொளி காட்சி மூலம் சென்னை தடய அறிவியல் துறை அலுவலகத்திலிருந்து சாட்சியம் அளிக்கிறேன். நான் கடந்த 15.12.2017 அன்று சென்னை துப்பாக்கி ஆய்வு பிரிவில் துணை இயக்குநராக பணியாற்றியபோது வேப்பங்குப்பம் காவல் நிலைய குற்ற எண் 410/2017 வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு எஸ்பி எம்எல் துப்பாக்கியை தலைமை காவலர் 1735 உமாசந்திரன் என்பவர் மூலமாக ஆய்வுக்காக பெறப்பட்டு துப்பாக்கியை ஆய்வு செய்து பின்வரும் கருத்துரைகளை வழங்கியுள்ளேன்.

1. இத்துப்பாக்கியானது புரியற்ற ஒற்றை குழல் முன் வழி நிரப்பும் நாட்டு துப்பாக்கியாகும். ஆயுத சட்டம் 1959ன் படி இது ஒரு சுடுபடைக்கலனாகும்.

2. இத்துப்பாக்கியின் குழலினுள் கரி மருந்து எரிந்ததின் எரிவினை பொருட்கள் கண்டறியப்பட்டது. இது துப்பாக்கி ஆய்விற்கு முன் சுட பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

3. சோதனைக்காக சுட்டு பார்த்ததில் இந்த துப்பாக்கி இயங்கும் நிலையில் இருந்தது.

இதற்கான ஆய்வு அறிக்கை 21.12.2017 தேதியிட்டு நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். **நான் வழங்கிய ஆய்வு அறிக்கை அ.த.சா.ஆ.7** ஆகும். நான் ஆய்வு செய்த துப்பாக்கி என்னிடம் காண்பிக்கப்படுவது. இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

(மேற்படி சாட்சியத்தை சென்னை தடய அறிவியல் துறை அலுவலகத்திலிருந்து Video conference மூலம் சாட்சி சொல்ல சொல்ல பதியப்பட்டு சாட்சிக்கு இந்த சாட்சியத்தின் PDF மின்னஞ்சல் மூலம் சென்னை தடய அறிவியல் துறை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு VC co–ordinator மூலம் சாட்சி அதை படித்து பார்த்து அதை hard copy–ல் கையொப்பம் போட்டு இந்த நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க அறிவுறுத்தப்படுகிறது.)

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.06.02 17:23:50 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.8 (L.W.9)

| | |
|---|---|
| Name | உமாசந்திரன் |
| Father/Husband Name | சுப்பிரமணி |
| Calling/Occupation | கூலி |
| Age | 54 |
| Address | நாயுடு தெரு, அகரம் சேரி, வேலூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

( Accused Present)

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். இதற்கு முன்பு நான் வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 15.12.2017 அன்று வேப்பஙகுப்பம் காவல் நிலைய குற்ற எண் 410/2017, பிரிவு 294(பி), 307 இத.ச. உ/இ 27 (1), 25(1) Indian Arms Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைப்பற்றப்பட்ட நாட்டு துப்பாக்கியை ஆய்வாளரின் கடிதத்துடன் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன்.

பின்னர் நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற உத்தரவு பெற்று அந்த நாட்டு துப்பாக்கியை தடய அறிவியல் துறை இயக்குநர் அலுவலகம், சென்னையில் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

ELAVARASAN Digitally signed by ELAVARASAN Date: 2026.06.02 17:23:58 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W.9 (L.W.10)

| | |
|---|---|
| Name | ராஜேந்திர பிராசாந்த் |
| Father/Husband Name | நடேசன் |
| Calling/Occupation | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Age | 64 |
| Address | எண்.79, புது தெரு. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2026.

( Accused Present)

**முதல் விசாரணை**

நான் உதவி ஆய்வாளராக பணியாற்றி 2021ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். மேலும் இந்த வழக்கில் நான் பணியில் இருந்தபோது வேப்பங்குப்பம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 கொடுத்த புகாரினை பெற்றுக்கொண்டு நிலைய குற்ற எண் 410/2017 பிரிவுகள் 294(பி), 307 இத.ச. உ/இ 27 (1), 25(1) Indian Arms Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8.** அ.சா.1 கொடுத்த **புகார் அ.த.சா.ஆ.9.**

பின்னர் இந்த வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 21.10.2017 அன்று பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சின்னசாமி, ஜெயக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயாரித்தேன். **அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.10** ஆகும். பின்னர் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் நான் தயாரித்தேன். **அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.11** ஆகும்.

பின்னர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஆஜர் எதிரியை 22.10.2017 அன்று பகல் 14.00 மணிக்கு மூலனூர் மந்தை வெளியில் இருந்த எதிரி முத்துசாமியை சாட்சி 1 அடையாளம் காட்ட கைது செய்தும் கைது செய்த விவரத்தினை எதிரியின் உறவினர்களுக்கு செல்போன் மூலம் தகவல் தெரிவித்தும், அன்றே 14.10 மணிக்கு எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பாண்டு, ரவி ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். எதிரி கொடுத்த வாக்குமூலத்தில் அவர் வழக்கில் பயன்படுத்திய நாட்டு துப்பாக்கியை அடையாளம் தெரியாத நபரிடமிருந்து ரூ.1500/- கொடுத்து வாங்கியதாகவும் அதனை வீட்டின் பின்புறம் உள்ள புதரில் மறைத்து வைத்திருப்பதாக கூறியதால் எதிரி மற்றும் சாட்சிகளுடன் அவரின் வீட்டின் பின்புறம் சென்று பார்த்தபோது நாட்டு துப்பாக்கியை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை 21.10.2017 அன்று 15.15 மணிக்கு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன்.

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஆஜர் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். ஆஜர் எதிரி கொடுத்த **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.12. கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.13. நாட்டு துப்பாக்கி சா.பொ. 1** ஆகும். பின்னர் ஆஜர் எதிரியுடன் நிலையம் சென்று திரேக விசாரணைக்கு பின்னர் காவலர் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். சாட்சிகள் வளர்மதி, ஜெயகுமார், சின்னசாமி, சின்னக்கா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் பாண்டு, ரவி மற்றும் சின்னசாமி ஆகியோர்களையும் விசாரித்து வாக்குமுலங்கள் பதிவு செய்தேன்.

பின்னர் 21.12.2017 அன்று வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கிடைத்த இரசாயன அறிக்கையை வேலூர் நீதித்துறை நடுவர் எண் 3 மூலம் நகல் பெற்று சென்னை சென்று சாட்சி திருநாவுக்கரசு என்பவரை விசாரணை செய்ததில் வழக்கில் கைப்பற்றிய துப்பாக்கி நாட்டு துப்பாக்கிதான் என்றும் எஸ்பிஎம்எல் வகையை சேர்ந்தது என்றும்மேற்படி துப்பாக்கி ஏற்கனவே சுடப்பட்ட தடயங்கள் இருந்ததாகவும் சான்று வழங்கியது குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரரிடம் வெறும் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு இந்த வழக்கிற்கு ஏற்றவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யாமல் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்து எந்தவிதமான வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை என்றும் நாட்டு துப்பாக்கியையும் அவரிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆவணங்களை காவல் நிலையத்திலேயே தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.06.02 17:24:06 +0530